Regd with the Registrar of Newspapers for India No. TN TAM/2007/22101
Regd. TN/CC(S)Dn/326/13-15    Date of Publication 25th of Every Month


## வேத ஆராய்ச்சி பாடங்கள்

வாரந்தோறும் – திங்கள் கிழமைகளில்
மாலை – 6.30 மணி முதல் 8.30 மணி வரை
இடம் : ஏ–4, டேஜு ப்ளாசா
2, தெற்கு அவென்யூ
ஸ்ரீநகர் காலனி
சைதாப்பேட்டை
சென்னை – 600 015
(சைதாப்பேட்டை கோர்ட் அருகில்)

வேதத்தின் ஆழங்களைப் படித்து தெரிந்துகொள்ளவேண்டும் என்று வாஞ்சிப்பவர்கள் இதில் கலந்து கொள்ளலாம்












Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# எக்காளம்

Vol. 6
Issue. 9

தனிப்பிரதி ரூ20/=
மே 2013





# சத்தியம் விடுதலையாக்கும்

- சகோதரி. **நிஜா கென்னடி**

இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி : **நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே, என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்** என்றார் (யோவான் *8:31:32*). நாம் இயேசு கிறிஸ்துவின்மீது நம்பிக்கை வைத்து அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அதன்படி வாழ்ந்தால், உண்மையாகவே, அவருடைய சீஷராயிருப்போம். நாம் உண்மையாய் தேவனை நேசித்தால், அவருடைய வார்த்தையை பின்பற்றி வாழ்வோம். வார்த்தையின்படி வாழவில்லை என்றால், நாம் தேவனை நேசிக்கவில்லை என்பதை அறிந்து கொள்ளலாம் (1யோவான் *5:3*). நாம் ஒவ்வொருவரும் அவரோடுகூட ஐக்கியமாய் வாழ விரும்புகிறார். **என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாகவும் இருக்கிறது** என்று மத்தேயு *11:29,30*ல் இயேசு கிறிஸ்து கூறுகிறார். இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவரைப் பின்பற்றி வாழ்வதை அநேகர் கடினமாக நினைக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள், அவருடைய வார்த்தைகளை கற்றறிந்து கொண்டு, அதன்படி நடக்க மனதையும், உடலையும் பயிற்றுவிக்க வேண்டும். அவரைப் பின்பற்றி வாழ வேண்டும். வார்த்தை உண்மை என்பதை உணர்ந்து அதில் உறுதியாக நிலைத்திருக்கவேண்டும். சத்தியத்தைப்பற்றி நன்கு அறிந்து கொண்டு அதில் தேர்ச்சிப் பெற்றவர்களாக இருக்க வேண்டும். கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து, கட்டுப்பாடாகவும், பணிவாகவும், ஒழுக்கமாகவும் வாழ பயிற்சியெடுக்க வேண்டும். நடைமுறை வாழ்க்கையில் செயல்படுத்த வேண்டும்.

**ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது; அந்த வார்த்தை தேவனாயிருந்தது** (யோவான் *1:1*). இந்த உலகம் உண்டாக்கப்படும் முன்னே வார்த்தை இருந்தது. **அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்** (யோவான் *1:14*). தேவனுடைய வார்த்தையாக இருந்த தேவன் ஒரு மனிதனாய்



இயேசு கிறிஸ்துவாய் இந்த உலகத்திற்கு வந்தார். அப்போஸ்தலனாகிய யோவான், இயேசுகிறிஸ்துவோடு கூட இருந்த அனுபவத்தை இப்படியாகக் கூறுகிறான்: **ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப் பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்** (1 யோவான் *1:1*). வானமும், பூமியும் உண்டாவதற்கு முன்பே இருந்தது இந்த வார்த்தை. இந்த வார்த்தையினால்தான் வானத்தையும், பூமியையும் உருவாக்கினார். இந்த வார்த்தைதான் மாம்சமாகிய இயேசுகிறிஸ்துவானது. அதைத்தான் அப்போஸ்தலனாகிய யோவான் குறிப்பிடுகிறான். மாம்சத்தில் வந்த தேவனாகிய இயேசுகிறிஸ்து (1 தீமோத்தேயு *3:16*) இந்த பூமியில் இருந்த நாட்களெல்லாம் உபதேசிக்கிறவராகவும், பிரசங்கிக்கிறவராகவும் இருந்தார். அவர் என்ன வார்த்தைகளைப் பேசினாரோ, அவைகள் சத்தியமானவைகள். அதில் பொய்யில்லை, மாயையில்லை. அவர் பேசினவைகளெல்லாம் மிகவும் பிரயோஜனமானவைகள். மனித வாழ்விற்கு இன்றியமையாதவைகள். வார்த்தையின்படியே வாழ்ந்தும் காண்பித்தார். அவருடைய வாழ்க்கை ஒன்றாகவும், அவருடைய போதனை வேறொன்றாகவும் இருக்கவில்லை. அவருடைய நாமம் **தேவனுடைய வார்த்தை** என்பதே (வெளி *19:13*). இதையே இயேசுதான் வார்த்தை என்று குறிப்பிடுகிறோம்.

இயேசு கிறிஸ்துதான் வார்த்தை. வார்த்தைதான் இயேசுகிறிஸ்து. வேதமே சத்தியம். **நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்** (யோவான் *14:6*). என்கிறார். சத்தியத்தை அறிய அறிய அவரை அறிந்து கொள்கிறோம். சத்தியத்தை அறிந்து கொள்வது என்பது கர்த்தரண்டை வருவதாகும். சத்தியம் தேவனுடைய ராஜ்யத்தை வெளிப்படுத்தும். தேவ சித்தத்தை வெளிப்படுத்தும். வார்த்தை பாவத்தை உணர்த்தும். சத்தியத்தை பேசும்போது, பாவ வாழ்க்கையை சுட்டிக்காட்டுகிறது. சத்தியத்தின்படி வாழும்போதுதான் அனலுள்ள ஜீவியம் ஜீவிக்க முடியும். அனலுமின்றி குளிருமின்றி வாழ்ந்தால் வாந்தி பண்ணிப்போடுவேன் என்று கூறுகிறார்.

எல்லாவிதமான வசதிகளோடு வாழ்பவர்கள் கர்த்தரைத் தேடமாட்டார்கள். வேதத்தை படிக்கமாட்டார்கள். கஷ்டம்வரும்போது மட்டும் கர்த்தரண்டை வருவார்கள். தேவைக்காகவும், ஆசீர்வாதத்திற்காகவும் கர்த்தரிடம் வருவார்கள். அவர்கள் ஆண்டவருடைய உண்மையான அன்பை ருசித்துப் பார்க்கவில்லை. சத்தியத்தை அறியாதவர்கள் குழப்பமாய் இருப்பார்கள். தெளிவான சிந்தனை இருக்காது. சரியான முடிவு எடுக்க முடியாது. மன உறுதியில்லாமல், மனோதிடன் இல்லாமல், எப்பொழுதும் பயந்துகொண்டே இருப்பார்கள். சத்தியபரரை அறிந்து கொண்டால் சத்தியபரர்மேல் விசுவாசம் வரும். விசுவாசம் இருக்கும்போது, பயம், கலக்கம், சந்தேகம் இருக்காது.

அநேகர் சத்தியத்தின்படி நடக்காததால் மெய்யான அன்பு அவர்களிடமிருந்து வெளிப்படுவதில்லை. உதட்டளவில் மட்டும் அன்பு வரும். கர்த்தருடைய வார்த்தையின்படி நடக்கும்போது, தேவ அன்பு இருதயத்திலிருந்து வெளிப்படும்.

அநேகர் சத்தியத்தை சத்தியமாய் அறிந்து கொள்ளாமல் மேலோட்டமாகப் படித்துவிட்டு, அவர்களாகவே தவறான விளக்கத்தை சொல்லிக் கொண்டிருப்பார்கள். சத்தியத்தை

சரியாய் புரிந்து கொள்ளாமல், ஆழங்களை அறிந்து கொள்ள விரும்பாமல் தவறாக அறிந்து வைத்திருப்பார்கள்.

சாத்தான் அநேகரை தவறான எண்ணங்களினாலும், மூடநம்பிக்கைகளினாலும் கட்டி வைத்திருக்கிறான். கர்த்தருடைய வார்த்தைத்தான் அந்த பொய்யிலிருந்து, விடுவிக்கமுடியும். ஏசாயா தீர்க்கதரிசி இப்படியாகச் சொல்லுகிறான்: **இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும் காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக, அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க்கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்பதே** (மத்தேயு *13:15*). சாத்தான் மனதை கட்டுகிறான். கட்டை அவிழ்க்கும்போது, விடுதலை வரும். மனக்கண்கள் திறக்கப்படும். பிரகாசமுள்ள மனக்கண்கள் திறக்கப்படும்போது மனது மறுரூபமாகிறது. கிறிஸ்து இயேசுவுக்குள்ளிருந்த சிந்தையை அறிந்துகொண்டு அதன்படி நடக்க வேண்டும். எல்லா சிந்தைகளையும் இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக கொண்டு வரவேண்டும். தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம் (2 கொரிந்தியர் *10:5*).

**இந்த வசனங்கள் உண்மையும் சத்தியமுமானவைகள்** (வெளி *22:6*). **சத்தியம் கடைசி நாளில் நியாயம் தீர்க்கும். நான் நியாயந்தீர்த்தால், என் தீர்ப்பு சத்தியத்தின்படியிருக்கும்** (யோவான் *8:16*). தேவனுக்கு எதிராக பாவம் செய்தவர்கள் சத்தியத்திற்குள் வரும்போது, கர்த்தரண்டை வருகிறார்கள். வார்த்தைகளைக் கொண்டு கர்த்தரிடத்தில் திரும்புங்கள் (ஓசியா *14:2*).

அப்போஸ்தலனாகிய பேதுரு அந்தியோகியாவுக்கு வந்தபோது, யூதர் அல்லாதவர்களோடு சேர்ந்து சாப்பிட்டான். ஆனால் யாக்கோபினிடத்திலிருந்து, சில யூதர்கள் வந்தபோது, யூதர் அல்லாதவர்களோடு சாப்பிட மறுத்துவிட்டான். யூதர்கள் தன்னை குறித்து என்ன நினைப்பார்கள் என்று பயந்து விலகினான். மற்ற யூதரும் அவனுடனே கூட மாயம் பண்ணினார்கள். பேதுரு சபைக்கு தலைவராக இருந்தும் நடித்தான். **இப்படி அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடவாததை பவுல் கண்டபோது, பேதுருவை நேரடியாக கண்டித்தான்** (கலாத்தியர் *2:14*). முகமுகமாய் எதிர்த்துப்பேசி திருத்தினான். பேதுருவும் தான் செய்த தவறை உணர்ந்து தன்னை திருத்திக் கொண்டான். தன்னை கண்டித்த பவுல்மீது பேதுரு கோபப்படவில்லை.

பிரியமானவர்களே! நாம் சத்தியத்தின்படி, நடக்கிறோமா? அல்லது சத்தியத்தின்படி நடப்பவர்கள்போல வெளியே காண்பித்து மாய்மாலம் பண்ணுகிறோமா? மற்றவர்கள் நம்மை பக்தியுள்ளவர்கள் என்று சொல்ல வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு முன்பாக நடிக்கிறோமா? நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். தேவனை உண்மையாய் நேசித்து, வார்த்தையின்படி நடக்காமல் இருந்ததை மற்றவர்கள் கண்டித்து உணர்த்தும்போது, அப்போஸ்தலனாகிய பேதுருவைப்போல நம்மை தாழ்த்தி திருத்திக்கொள்ள வேண்டும். தன்னை கண்டித்து திருத்தின பவுலை,



பேதுரு நேசித்ததுபோல நம் தவறுகளை உணர்த்தினவர்களை மனதார நேசிப்போம்.

மற்ற மனிதர்கள் நம்மை குறித்து என்ன நினைப்பார்கள் என்று நினைத்து, அவர்களுக்கு பயந்து அவர்களைப் பிரியப்படுத்த எல்லா காரியங்களையும் செய்து கொண்டிருந்தோமானால் கண்ணியில் மாட்டிக்கொள்வோம். **மனுஷனுக்கு பயப்படுகிற பயம் கண்ணியை வருவிக்கும்** (நீதிமொழிகள் *29:25*). சத்தியத்தின்படி நடந்து கர்த்தருக்குப் பிரியமாய் வாழ்வோம். எந்த மனிதனும் நம்மை ஆளுகை செய்து, நம்மை மேற்கொள்ளாதபடி, கர்த்தர் நம்மை ஆளுகை செய்யும்படியாக நம்மை ஒப்புக்கொடுப்போம். சத்தியத்தை முழுமையாக அறிந்து கொள்ளும்போது, மனிதர்களுடைய ஆளுகையிலிருந்து, மனுஷர்களுடைய கண்ணியிலிருந்தும், தந்திரங்களிலிருந்தும், தீய ஆலோசனைகளிலிருந்தும், சதித்திட்டங்களிலிருந்தும் நாம் விடுதலை பெறுவோம்.

அநேகர் போதை மருத்துகளுக்கும், குடிப்பழக்கங்களுக்கும், விபச்சார, வேசித்தன பாவங்களுக்கும்அடிமையாகி, அதிலிருந்து வெளியேவர முடியாமல் அதற்கு அடிமையாயிருப்பார்கள். இயேசு கிறிஸ்துவால் மட்டுமே பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து நம்மை மீட்டெடுத்து விடுவிக்கமுடியும். பாவம் செய்ததின் விளைவாக வரும் தண்டனையிலிருந்து நம்மை விடுவிக்கிறார். தன் சுயபெலத்தை நம்பி, சுயவழியில் சென்று ஏமாந்துபோய், தனக்குத்தானே அழிவை உண்டாக்கியிருப்பவர்களை விடுவிக்கிறார். உலகத்தின் மாயையில் சிக்கித் தவிப்பவர்களையும், பண ஆசையில் நிறைந்து தங்களை உருவக்குத்திக் கொண்டிருப்பவர்களையும், சாத்தானின் பிடியில் இருப்பவர்களையும் விடுவிக்கிறார். அவர்களை அழிவிலிருந்து விலக்கி காப்பாற்றி உண்மையான நல்ல வழியைக் காட்டுகிறார். அழிவில்லாத என்றும் நிலைத்திருக்கிற தேவனோடுகூட வாழும் வாழ்க்கைக்கு நேராக வழிகாட்டுகிறார். நாம் விரும்புகிற வழியில் செல்லாமல், தேவனை பின்பற்றி வாழவே தேவன் விரும்புகிறார். நாம் கர்த்தரைத்தேடி, அவருக்காக வாழ முன்வரும்போது, சத்தியமுள்ள வார்த்தைகள், நம்மிடம் காணப்படும் பெருந்தன்மையற்ற குணம், அன்பில்லாத, இரக்கமற்ற தன்மைகளை மாற்றி, தேவன் விரும்புகிறபடி நம்மை மாற்றுகிறது.

வேலைபார்க்கும் இடத்திலோ அல்லது வீட்டிலோ உங்களை இரக்கமற்ற முறையில் நடத்துகிறார்களா? வேண்டுமென்றே உங்களை அலைக்கழித்து துன்பப்படுத்துகிறார்களா? உங்களுக்குரிய சுதந்தரத்தை (ஆசீர்வாதத்தை) கொடுக்க விடாமல் தடை செய்கிறார்களா? ஒடுக்குகிறார்களா? கவலைப்படாதிருங்கள். கர்த்தர் உங்களை அவர்களுடைய அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க வல்லவராயிருக்கிறார்.

பலவிதமான கவலைகளினாலும் மனப்பாரங்களினாலும், துக்கங்களினாலும் தோல்விகளினாலும் சோர்ந்துபோய் மனஅமைதியில்லாமல் சமாதானத்தை இழந்து காணப்படுகிறீர்களா? இயேசு கிறிஸ்துவிடம் வாருங்கள். அவர் உங்கள் மனப்பாரங்களிலிருந்தும், துக்கங்களிலிருந்தும் விடுவிப்பார். சமாதானத்தைத் தருவார். தோல்வியை மாற்றி வெற்றியைத் தருவார். துக்கங்களை சந்தோஷமாக மாற்றுவார். சோர்வை எடுத்துப்போட்டு உற்சாகத்

தின் ஆவியினால் நிரப்புவார். வியாதியின் கொடுமையில் கட்டப்பட்டு இருப்பவர்களை இயேசு கிறிஸ்து வியாதியின் கட்டுகளிலிருந்து விடுவிக்க வல்லவராயிருக்கிறார்.

இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: **பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அடிமையானவன் என்றைக்கும் வீட்டிலே நிலைத்திரான்; குமாரன் என்றைக்கும் நிலைத்திருக்கிறார். ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்** (யோவான் 8:33-36). **துன்மார்க்கனை அவனுடைய அக்கிரமங்களே பிடித்துக்கொள்ளும்; தன் பாவக்கயிறுகளால் கட்டப்படுவான்** (நீதிமொழிகள் 5:22). **உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும் என்று நிச்சயமாய் அறியுங்கள்** (எண்ணாகமம் 32:23). நாம் பாவம் செய்யும்போது அந்த பாவம் அடிமைத்தனத்திற்கு நேராக வழிநடத்துகிறது. நம்மை கட்டுப்படுத்தி, அடக்கி ஆளுகை செய்கிறது. நம்மீது ஆதிக்கம் செலுத்தி, செயல்களில் அதிகாரம் செய்கிறது. இயேசு கிறிஸ்துவால் மாத்திரமே இந்த பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து நம்மை விடுவிக்க முடியும். நாம் பாவத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருந்தால், நம்மை பாவத்தின் வல்லமையிலிருந்து விடுவிக்க இயேசு கிறிஸ்து வல்லவராயிருக்கிறார். எந்தவிதமான பாவங்களுக்கு அடிமைப்பட்டிருக்கிறவர்களையும் அவரால் விடுவிக்க முடியும். பாவ பழக்கவழக்கங்களுக்கு அடிமையாகி அதிலிருந்து வெளியேவர முடியாமல் தவிக்கிறீர்களா? கவலைப்படாதிருங்கள். நம் வாழ்க்கையை இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்கும்போது, அவர் நம் பாவங்களை கழுவி சுத்திகரித்து, பரிசுத்தப்படுத்தி விடுகிறார். நம்மை அவருடைய பிள்ளைகளாய் மாற்றிவிடுறார். பாவம் நம்மை மேற்கொள்ள முடியாது.

இன்றைக்கும் அநேகர் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். சிலர் குறிப்பிட்ட பாவங்களுக்கு அடிமைப்பட்டிருக்கிறார்கள். சிலர் மனிதர்களுக்கு அடிமையாயிருப்பார்கள். சத்தியத்தை சரியாய் அறிந்து கொள்ளாததினால், வீட்டின் தலைவனாக இருக்க வேண்டியவர்கள் மனைவிக்கு அடிமையாக இருக்கிறார்கள். கர்த்தருக்கு பயந்து வாழவேண்டியவர்கள், மனைவிக்கு பயந்து வாழ்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தை என்ன சொல்லுகிறது என்றால், புருஷன் மனைவிக்குத் தலையாயிருக்கிறான் (எபேசியர் 5:23).

சிலர் பணத்துக்கு அடிமையாயிருப்பார்கள். பணத்துக்காக எதை வேண்டுமானாலும் செய்ய முன்வருவார்கள். இயேசு கிறிஸ்துவை காட்டிக் கொடுத்த யூதாசைப்போல இருப்பார்கள். சிலரை ஜாதிபார்க்கும் அடிமைத்தனத்தில் சாத்தான் கட்டி வைத்திருப்பான். இப்படிப்பட்டவர்கள் குறிப்பிட்ட இனத்தாரை மிகவும் உயர்வாகவும், மற்றவர்களை மிகவும் தாழ்வாகவும் பார்ப்பார்கள். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்ட யாவரும் சகோதர, சகோதரிகளாக இருக்கிறார்கள் என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகிறது. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாதவர்கள் புறஜாதியார்கள். இயேசு கிறிஸ்து எல்லா மனிதர்களையும் தம்முடைய பிள்ளைகளாகத்தான் பார்க்கிறார். அவருடைய பார்வையில் நாமும் பார்க்க கற்றுக் கொள்வோம்.



இன்னும் சிலர் பரிசேயர்கள்போல மாய்மாலம் பண்ணுகிறார்கள். முன்னோர்களின் பாரம்பரியத்திற்கும் சடங்காச்சாரத்திற்கும் அடிமைப்பட்டிருப்பார்கள். இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவருக்குள் வாழ்கிறேன் என்று சொல்லுபவர்கள்கூட பாரம்பரியத்தையும், சடங்காச்சாரத்தையும் பின்பற்றுகிறார்கள். முழுவதுமாக அதை விட்டுவிடாமல் இன்னும் அதை கடைப்பிடிக்கிறார்கள். **கிறிஸ்துவுக்குள் ஒருவன் ஜீவித்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் யாவும் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின** (2 கொரிந்தியர் 5:17).

இன்னும் அநேகர் நாள், நேரம், கிழமைகளை பார்த்துக்கொண்டு தாங்களும், கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு மாய்மாலம் பண்ணுகிறார்கள். சாத்தான் மனிதர்களை பலவித கண்ணிகளினாலும், மூடநம்பிக்கைகளினாலும் கட்டி வைத்திருக்கிறான். மனிதனுக்குள் பேராசையைக் கொண்டு வந்து, இருப்பவற்றில், திருப்தியாக இருக்கவிடாமல் இன்னும் சேர்க்க வேண்டும் என்ற ஆசையை கொண்டு வருவான். தேவனுக்கு பிரியமில்லாத வழியில் பணத்தை சேர்க்கத் தூண்டுவான். **பண ஆசை எல்லாத்தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்** (1 தீமோத்தேயு 6:10). **பொருளாசையுள்ள எல்லாருடைய வழியும் இதுவே; இது தன்னையுடையவர்களின் உயிரை வாங்கும்** (நீதிமொழிகள் 1:19). **பொருளாசைக்காரன் தன் வீட்டைக் கலைக்கிறான்; பரிதானங்களை வெறுக்கிறவனோ பிழைப்பான்** (நீதிமொழிகள் 15:27). பேராசையுள்ளவர்கள் தங்கள் பேராசையினாலே அழிந்து போவார்கள். ஏனென்றால் மற்றவர்களிடமிருந்து கொள்ளையிட்டு, நியாயமற்ற முறையில் பணத்தை சேர்ப்பார்கள். **பிறனுக்குரிய யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக** என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகிறது.

**தாங்கள் மாத்திரம் தேசத்தின் நடுவில் வாசமாயிருக்கும்படி மற்றவர்களுக்கு இடமில்லாமற்போகுமட்டும், வீட்டோடே வீட்டைச் சேர்த்து, வயலோடே வயலைக் கூட்டுகிறவர்களுக்கு ஐயோ** (ஏசாயா 5:8). தங்களது சுய ஆதாயத்துக்காக மற்றவர்களுக்குரியதை நேர்மையற்ற முறையில் துணிகரமாக எடுத்துக் கொள்கிறவர்களுக்கு ஐயோ என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகிறது. தங்களுக்கு போதுமான இடங்களையும், வீடுகளையும் வைத்திருந்தும் மற்றவர்களுக்குரியதை எடுத்துக் கொள்வதையும், எடுத்துக் கொள்ள நினைப்பதையும் கர்த்தர் வெறுக்கிறார். கர்த்தருடைய தண்டனை அவர்கள்மேல் வரும். இப்படிப்பட்டவர்கள் மற்றவர்கள்மேல் அக்கரையில்லாமல், சுயநலமுள்ளவர்களாய் இருப்பார்கள்.

**அநியாயமாய் ஐசுவரியத்தைச் சாம்பாதிக்கிறவன் முட்டையிட்டு அவயங் காத்தும் குஞ்சுபொரிக்காமற்போகிற கவுதாரிக்குச் சமானமாயிருக்கிறான்; அவன் தன் பாதிவயதிலே அதைவிட்டு, தன் முடிவிலே மூடனாயிருப்பான்** (எரேமியா 17:11). ஏமாற்றி பணத்தை சேர்க்கிறவர்கள் சந்தோஷத்தோடு, சமாதானத்தோடு வாழ முடியாது. அவர்கள் சந்ததிகளுக்கும் சாபம் பின்தொடரும். உண்மையாய் இருக்கும்போது, கர்த்தருடைய ஆசீர்வாதம் கடந்துவரும். **உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்; ஐசுவரியவானாகிறதற்குத்**

**தீவிரிக்கிறவனோ ஆக்கினைக்குத் தப்பான்** (நீதிமொழிகள் *28:20*). பேராசை வரும்போது, அதைக்கட்டுப்படுத்தி வேரோடே அகற்றிவிட வேண்டும். **போதுமென்கிற மனதுடனேகூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம், உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை. இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம்** (1 தீமோத்தேயு *6:7*). அநேகர் மற்றவர்கள் தங்களைப் பார்க்க வேண்டும் என்று வாழ்கிறார்கள். நாளைக்கு வேண்டும் என்று சேர்த்து வைத்து அனுபவிக்காமல் போய் விடுகிறார்கள். சத்தியத்தின்படி பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வைப்போம். கர்த்தருடைய ஊழியங்களுக்கு கொடுப்போம். தேவையோடு இருக்கும் ஏழை, எளியவர்களுக்கு உதவி செய்வோம் (2 கொரிந்தியர் *9:9-13*).

சிலர் தங்களுடைய எதிர்காலம் எப்படியிருக்குமோ என்று எதிர்காலத்தைக் குறித்து பயந்து கொண்டேயிருப்பார்கள். சிலர் மனிதர்கள் பேசிய கடினமான வார்த்தைகளினாலும், இரக்கமில்லாமல் நடந்து கொண்ட விதத்தினாலும், செயல்களினாலும் இருதயம் நொறுங்குண்டு கலங்கிப்போய் இருப்பார்கள். எப்பொழுது என்ன கடினமான வார்த்தைகளை பேசுவார்களோ எப்படி நடந்து கொள்வார்களோ? என்று பயந்து பயந்து வாழ்வார்கள். சில பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு பயந்து வாழ்வார்கள். சிலர் வாழ்க்கையில் நடக்கிற பிரச்சனைகளையும் சூழ்நிலைகளையும் குறித்து வேதனையடைந்து, அடுத்து என்ன நடக்குமோ? என்று பயந்து கொண்டேயிருப்பார்கள். சிலர் மரண பயத்தோடிருப்பார்கள். சிலர் பாவம் செய்ததினால், மனசாட்சி குத்துண்டவர்களாய், பயந்து பயந்து வாழ்வார்கள். சத்தியத்தை அறிந்து கொள்ளும்போது, பயத்திலிருந்து, கலக்கத்திலிருந்து, நோயிலிருந்து, பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து, சாபங்களிலிருந்து, பிசாசின் கட்டுகளிலிருந்து விடுதலையை பெற்றுக் கொள்ளலாம். இயேசு கிறிஸ்து எல்லா நெருக்கத்திலிருந்தும் விடுவிப்பார்.

இதுவரை நாம் செய்த எல்லாப் பாவங்களையும் அறிக்கையிடும்போது, இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை கழுவி சுத்திகரிக்கும். நாம் பரிசுத்தமாகி விடுகிறோம். பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்படுகிறோம்.

**இயேசு மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவ காலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார்** (எபிரெயர் *2:14,15*). இரட்சிப்பை பெற்றுக்கொண்ட அனைவரும் இயேசு கிறிஸ்துவுக்கு சொந்தமானவர்கள். இவர்கள் மரணத்திற்கு பயப்படமாட்டார்கள். மரணம் வந்தால் தேவனிடத்தில் செல்கிறோம். அதனால் மரணத்திற்கு பயப்பட அவசியமில்லை.

**மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காக சாபமாகி நியாயப் பிரமாணத்தின் சாபத்துக்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்** (கலாத்தியர் *3:13*).

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களை அக்கினி ஜீவாலையிலிருந்து விடுவித்த தேவன் உங்களையும் விடுவிக்க வல்லவராயிருக்கிறார். மற்ற மனிதர்கள் உங்கள்மேல் பொறாமை கொண்டு உங்கள்மேல்





குற்றஞ்சாட்டினா லும், அவர்களின் கைக்கு உங்களை விலக்கி விடுவிக்க தேவன் வல்லவராயிருக்கிறார்.

**அப்பொழுது தங்கள் ஆபத்திலே அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள். அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கிறார்** (சங்கீதம் *107:28*). இரட்சிக்கப்பட்டு அவருடைய வார்த்தையின்படி, நடக்கிறவர்கள், துன்பமான வேளையில் அவரை நோக்கி கூப்பிடும்போது, கர்த்தர் அவர்களை காப்பாற்றுகிறார்.

**அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார். அவர்தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார்** (மத்தேயு *8:16,17*). இயேசு கிறிஸ்து தமது வார்த்தையினால் பிசாசுகளைத் துரத்தினார். பிசாசின் பிடியில் இருந்தவர்களை விடுவித்தார். வியாதியாய் இருந்த அனைவரையும் குணமாக்கினார். பிசாசு வியாதிகளையும், பெலவீனங்களையும் கொண்டு வந்து அநேகரை கட்டி வைத்திருப்பான். **பதினெட்டு வருடமாய் பலவீனப்படுத்தும் ஆவியினால் ஒரு ஸ்திரீயை பிசாசு கட்டி வைத்திருந்தான். அவள் நிமிர்ந்து நிற்க முடியாதபடி கூனியாயிருந்தாள். இயேசு அவள் பலவீனத்திலிருந்து அவளை விடுதலையாக்கினார். உடனே அவள் நிமிர்ந்து தேவனை மகிமைப்படுத்தினாள்** (லூக்கா *13:11-13*). இயேசு கிறிஸ்து நம்முடைய பாடுகள், துக்கங்கள், நோய்கள், பெலவீனங்கள் யாவற்றிலிருந்தும் நம்மை விடுவிக்கிறார்.

இரட்சிப்பை பெற்றுக் கொண்டவர்கள், தொடர்ந்து பரிசுத்தமாய் வாழ பரிசுத்த ஆவியானவரைக் கேட்டு பெற்றுக்கொள்ள வேண்டும்.

**சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்** (யோவான் *16:13*). பரிசுத்த ஆவியானவரை நாம் பெற்றுக் கொள்ளும்போது, நம்மோடு கூட இருப்பார். நமக்கு போதிப்பார். அபிஷேகம் சகலவற்றையும் நமக்கு போதிக்கும். சத்திய ஆவியானவர், வார்த்தையை நமக்கு போதித்து உணர்த்துவார். பாவத்தைக் குறித்தும் அதற்கான தண்டனையைக் குறித்தும் உணர்த்துவார். தீமை செய்ததினால் வரும் தீர்ப்பையும் குறித்து உணர்த்துவார் (யோவான் *16:8*).

வேதத்தை படிக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் உதவி செய்கிறார். வேதவார்த்தைகள் உண்மையானது என்பதை நம்ப வேண்டும். **தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறிய மாட்டான்** (1 கொரிந்தியர் *2:11*).

**உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய**

வசனமே சத்தியம் (யோவான் 17:17). இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகிற ஒவ்வொருவரும் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து, அதற்கு கீழ்ப் படிந்து நடக்கும்போது, பரிசுத்தமாக்கப் படுகிறோம்.

தேவனுடைய வார்த்தையானது **ஜீவனும், வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது** (எபிரெயர் 4:12). தேவனுடைய வார்த்தை உயிருள்ளது. வல்லமையுள்ளது. அதனால் அதை வாசிக்கிறவர்கள் உள்ளத்தில், வாழ்க்கையில் கிரியை செய்கிறது. வாசிக்கிறவர்களின் நல்ல மற்றும் தீய குணங்கள், பாவங்கள் யாவற்றையும் தெளிவாகக் காட்டுகிறது. ஆதலால் நாம் வேதத்தை தியானிக்க வேண்டும்.

அனுதினமும் வேதவார்த்தையை நடைமுறை வாழ்க்கையில் பயன் படுத்தும்போது, வார்த்தை நமது சிந்தையிலும், இருதயத்திலும் இருக்கிற கறைகளை நீக்கி தூய்மையாக்குகிறது. வார்த்தை நம் பாவத்தை சுட்டிக்காட்டி, நாம் யார் என்பதை வெளிப்படுத்துகிறது. நாம் எப்படியாக இருக்கிறோம் என்பதையும், நாம் எப்படியாக இல்லை என்பதையும் நமக்கு காட்டுகிறது. நம் வாழ்க்கையை மாற்றுகிறது. நம்மை பாவத்திலிருந்து மனந்திரும்பச் செய்கிறது. தேவனோடுகூட உள்ள ஐக்கியத்தை புதுப்பிக்கிறது. நம்மைச் சரியான வழிக்கு நேராக வழிநடத்துகிறது. ஆவி, ஆத்துமாவுக்குள் ஊடுருவிச் சென்று உள்ளான மனிதனின் எண்ணங்களையும், இருதயத்தின் நினைவுகளையும் நியாயம் தீர்க்கிறது.

இயேசு கிறிஸ்து இப்படியாகச் சொல்லுகிறார்: **சத்தியத்தைக் குறித்துச் சாட்சி கொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்** (யோவான் 18:37) **எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்** (1 தீமோத்தேயு 2:4).

சத்தியத்தை அறிவோம், விடுதலை பெறுவோம்.

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

| | |
|---|---|
| **உள்நாட்டு வருட சந்தா** | ரூ. 200/- |
| **வெளிநாட்டு வருட சந்தா** | ரூ. 2000/- |


S.PAULRAJ KENNEDY என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

**ICICI வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

**ICICI வங்கி கணக்கு எண் : 0350 0150 7744**

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா






தொடர்ச்சி..

மனுஷன் மாயைக்கு ஒப்பாயிருக்கிறான்; அவன் நாட்கள் கடந்துபோகிற நிழலுக்குச் சமானம் (சங்கீதம் 144:4).

நிழலைப்போன்ற மாயையான தன் ஜீவ காலத்தைப் போக்கும் மனுஷனுக்கு இந்த ஜீவனில் நன்மை இன்னதென்று அறிந்தவன் யார்? தனக்குப் பின்பு சூரியனுக்குக் கீழே சம்பவிக்கும் காரியம் இன்னதென்று மனுஷனுக்கு அறிவிப்பவன் யார்? (பிரசங்கி 6:12).

ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான்.

அவன் பூவைப்போலப் பூத்து அறுப்புண்கிறான்; நிழலைப்போல நிலைநிற்காமல் ஓடிப்போகிறான் (யோபு 14:1,2).

நாளையத் தினத்தைக் குறித்துப் பெருமை பாராட்டாதே; ஒரு நாள் பிறப்பிப்பதை அறியாயே (நீதிமொழிகள் 27:1)

வேதம் இப்படியாகச் சொல்லுகிறது: மனுஷனுடைய வாழ்நாட்கள் ஒரு குறிப்பிட்ட காலம்தான். அவன் காலத்திற்குப்பிறகு என்னவெல்லாம் நடக்குமென்று அவனுக்குத் தெரியாது. பூவைப்போல உதிர்ந்து போவான். நிழலைப்போல கடந்துபோய் விடுவான். அவனுடைய வாழ்நாட்கள் நிரந்தரமானதல்ல. ஒரு நாள் எப்படி கர்த்தரால் சிருஷ்டிக்கப்படுகிறது என்பதை அவனால் அறிய முடியாது. அவனுடைய ஜீவன் அவனுடைய ஆளுகைக்குள் இல்லை. வாழ்க்கையைக் குறித்த இந்த அறிவு ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியம்.

நாம் கடந்து வந்த பாதையில் இருள் இருந்தது, வெளிச்சம் இருந்தது. கசப்பு, இனிப்பு, மேடு, பள்ளம், சறுக்கல், தொய்வு, சிறுமை, மேன்மை எல்லாம் இருந்தது. ஒரேயொரு காரியம், பிரதான காரியம், இயேசு நம்மோடு இருந்தார். அரவணைக்க வேண்டிய நேரத்தில்

அரவணைத்தார். ஆறுதல்படுத்த வேண்டிய நேரத்தில் ஆறுதல்படுத்தினார். திடப்படுத்த வேண்டிய நேரத்தில் திடப்படுத்தினார். யோசனை தந்தார். ஆலோசனை கொடுத்தார். நம்மை செய்ய வைத்தார். ஒரு இயந்திரத்தை இயக்குவதுபோல, நம்மை அவர் இயக்கவில்லை. எல்லா விதமான உணர்வுகளின் வழியாகவும் நம்மை நடத்தினார். நன்றி தகப்பனே!

நாம் சிந்திக்க வேண்டுமென்று கர்த்தர் வாஞ்சிக்கிறார். அதற்காகவே சிந்திக்கும் ஆற்றலை கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிறார். நாம் எல்லா காரியங்களையும் ஆராய்ந்து பார்க்கலாம். கர்த்தர் அதைத் தடை செய்வதோ, அதில் குறுக்கிடுவதோ கிடையாது. அதில் நமக்கு முழு சுதந்திரம் கொடுத்திருக்கிறார். நம்மை சிந்திக்க வைப்பதற்காகவே பல சூழ்நிலைகளை அனுமதிக்கிறார். ஒவ்வொரு சூழ்நிலையிலும் நம்மை சிந்திக்க வைக்கிறார். வேதத்தின் மூலம் நம்மை சிந்திக்க வைக்கிறார். சிந்திப்பதற்கான ஆற்றலைத் தருகிறார். நாம் சந்தோஷமாய், சமாதானமாய், சௌக்கியமாய் (ஆரோக்கியமாய்) இருக்கும் காலங்களில் நம்முடைய வாழ்க்கையைப்பற்றி சிந்திப்ப தில்லை. சூழ்நிலைகள் நம்மை நெருக்கும்போது, நமது உடல் சுகவீனம் அடையும்போது, நமது மனதும், உள்ளமும் உடையும்போது நாம் சிந்திக்க ஆரம்பிக்கிறோம். அதற்காகத்தான் கர்த்தர் அப்படிப்பட்ட காரியங்களை நம்முடைய வாழ்க்கையில் அனுமதிக்கிறார்.

நமக்கு உடல் சுகவீனம் வரும்போதுதான், நமது சரீரத்தைப்பற்றி யோசிக்கிறோம். இது எப்படியென்றால், உதாரணமாக நாம் ஒரு வாகனம் வைத்திருக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அது ஓடிக் கொண்டிருக்கும்வரை அதைப்பற்றி நாம் யோசிப்பதில்லை. என்றைக்காவது ஓர் நாள் அது பாதிவழியில் ரிப்பேர் ஆகும்போதுதான் அதைப் பற்றி யோசிக்கிறோம். அதேபோலத்தான், நமது சரீரம் நல்ல சுகத்தோடு இருக்கும்வரை, அதைப்பற்றி நாம் யோசிப்பதில்லை. சரீரத்திலே சுகவீனம் வரும்போதுதான் சரீரத்தைப்பற்றி யோசிக்கிறோம். வெயிலில் போனால் தான் நிழலின் அருமை தெரியும் என்பதுபோலத்தான் இந்தக் காரியமும். பணம் நம் கையில் இருக்கும்வரை நம் இஷ்டம்போல செலவழிப்போம். பணம் இல்லாதபோதுதான் பணத்தை செலவழிப்பதைக் குறித்து யோசிப்போம்.

சிந்திக்கும்போதுதான் நம்முடைய ஆற்றல் பெலன் கொள்கிறது. நாம் பெலனடையும்போது, உறுதியுள்ளவர்களாகிறோம். கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று எல்லாவற்றைக் குறித்தும் சிந்திக்கிறோம். இதை கர்த்தர் வாஞ்சிக்கிறார். அனுதின வாழ்க்கையில் நாம் பேசுவதைக்கூட யோசித்து பேசுவோம் என்றால், வாழ்க்கையைக்குறித்து எவ்வளவாக யோசிப்போம்? யோசனை நம்மை பெலப்படுத்தும்.

ஒரு பெண்ணிற்கு அல்லது ஆணிற்கு வாழ்க்கைத் துணையைத் தேடும்போது, பலரை பார்க்க வேண்டியுள்ளது. முதலில் யாரை பார்க்கிறோமோ அதுவே முடியமாட்டேனென்கின்றது. காரியங்கள் நமக்கு வாய்க்காதபோது, கால தாமதம் ஆகும்போது நாம் சேர்வடைகிறோம்.



கர்த்தர் என்னை மறந்துவிட்டாரோ அல்லது கர்த்தர் என்மேல் கோபமாயிருக்கிறாரோ என்று நினைக்கிறோம். கர்த்தருக்கு சித்தமில்லாததை கர்த்தர் நிறுத்திப் போடுகிறார். இதுதான் நடக்கிறது. யாருக்கு யார் துணை என்பதை கர்த்தர் ஏற்கெனவே நிர்ணயித்து வைத்திருக்கிறார். அதற்கு மாறாக நாம் செயல்படும்போது அதைத் தடுத்து விடுகிறார். நமக்கு அவர் நன்மையே செய்கிறார். மனிதன், தன்னுடைய வாழ்க்கையைக் குறித்து யோசித்துப் பார்த்தால், கர்த்தர் என்ன செய்கிறார் அவனுடைய வாழ்க்கையில் என்பதையும், அதை விட முக்கியமாக அதற்கானக் காரணத்தையும் தெரிந்து கொள்ளலாம். அதற்காகவே ஊழியக்காரர்கள், சபைகள், பிரசங்கங்கள் எல்லாம் உள்ளது. இவற்றின் மூலம் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுடன் பேசுகிறார். வாழ்க்கையைப்பற்றிய சரியான கண்ணோட்டத்தை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு காரியம் நடக்காதபோது அல்லது தாமதப்படும்போது, நாம் அதைக்குறித்து அதிகமாக யோசிக்கிறோம். அப்போது நமது மனது பக்குவப்படுகிறது. அது ஒரு அனுபவம். அது ஒருநாளில் நடக்கும் காரியம் அல்ல. எங்கேயும் இதை கற்றுக் கொள்ள முடியாது. அனுபவம் மூலமாகக் கர்த்தர் நம்மை பக்குவப்படுத்தும் காரியமாகும்.

சோர்வு, ஏமாற்றம், தோல்வி இவைகளெல்லாம் நம் மனதை எப்படி பாதிக்கின்றது. அதனிமித்தம் நம் மனது படும் வேதனை, நம்மால் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாத ஒரு அழுத்தம். இவற்றையெல்லாம் நாம் முதலில் அனுபவிக்கிறோம். அதன்பிறகே இதை யோசித்துப் பார்த்துத் தெரிந்து கொள்கிறோம். அப்போது நாம் சமாதானமாய், சுகத்துடன் அழுத்தமில்லாமல் இருப்பது எவ்வளவு அவசியம் என்பதை உணர்ந்து கொள்கிறோம். அடுத்து நாம் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியிலும் இதை கருத்தில் கொண்டே செயல்படுவோம். நம் வாழ்க்கையை நாம் உற்று கவனிப்போம். நம்முடைய வாழ்க்கையில் பிரவேசிக்கும் ஒவ்வொரு மனிதனையும், சூழ்நிலையையும் உற்று கவனித்துப் பார்த்து யோசித்து செயல்படுவோம். நம்முடைய சமாதானம் நமக்கு பிரதானமாக முக்கியமாக இருக்கும். நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் மிகவும் நிதானமாக இருக்கும். கற்பனை செய்து பார்ப்பதைவிட, மற்றவர்கள் சொல்வதை வைத்து நிதானிப்பதைவிட, நாமே யோசித்து, நிதானித்து ஒரு முடிவை எடுப்போம். இது அனுபவத்தினால் மாத்திரமே வரும். அதினால் நமது செயல்பாடு உறுதியாய் இருக்கும். நமது கண்ணோட்டத்தில் தெளிவு இருக்கும். நம்முடைய வாழ்க்கையை நாம் சரியாய் புரிந்து கொள்வது அவசியம்.

வாழ்க்கை என்பது ஏன் போராட்டமாக உள்ளது? இது அநேகருடைய உள்ளத்தில் உள்ளக் கேள்வியாகும். போராட்டம் இல்லாமல், இலகுவானதொரு வாழ்க்கையாக இருக்கலாமே என்று நினைக்கிறார்கள். திருடுகிறவன், கொள்ளையடிக்கிறவன், இவர்களெல்லாம் இலகுவானதொரு

வாழ்க்கையை வாழ்கிறார்களே என்றும் நினைக்கிறார்கள். பணம் இருந்தால் சுகமாய் வாழலாம் என்ற முடிவுக்கு வருகிறார்கள். இன்று உள்ள பணக்காரர்களெல்லாம் இலகுவானதொரு வாழ்க்கையை வாழ்கிறார்களா? என்றால், 'இல்லை' என்பதுதான் பதில். சம்பாதித்த பணத்தை பாதுகாக்க வேண்டுமே என்று கவலை, இன்னும் சம்பாதிக்க வேண்டும் என்று எடுக்கும் கடுமையான முயற்சிகள், தன்னோடு வியாபாரம் செய்பவர்களோடு உள்ள உறவை விட்டுவிடக்கூடாது என்று எடுக்கும் பிரயாசங்கள், அரசாங்க அதிகாரிகளுடன் உள்ள உறவை லஞ்சம் கொடுத்து தக்க வைத்துக் கொள்வது, மற்ற வியாபாரிகளுடனான போட்டி இப்படி அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். எந்நேரமும் வியாபாரம், பணம் குறித்த யோசனை தான். சகோதர, சகோதரிகளுக்கிடையேயான சொத்து பிரச்சனை, குடும்பத்திலுள்ள யாராவது ஒருவர் ஏதாவதொரு பிரச்சனையில் சிக்கிக் கொண்டதனால் ஏற்படும் போராட்டம், இவைகளெல்லாம் பணத்தினால் ஏற்படும் போராட்டங்கள்.

பிரபலமாய் இருப்பவர்களுக்கு, அந்த பிரபலத்திற்கு என்று ஏற்படும் போராட்டங்கள் உண்டு. எப்போதும் பாதுகாப்பாய் இருக்கவேண்டும். தனித்து, சுதந்திரமாய் இருக்க முடியாது. பாதுகாப்பிற்காக இருப்பவர்களினாலேயே ஆபத்து நேரிடலாம் என்ற பயம் இருந்துகொண்டே இருக்கும். சுற்றியிருப்பவர்களில் பெரும்பாலானோர் முகஸ்துதி செய்பவர்களாக இருப்பார்கள். உண்மையான அன்பைக் காணமுடியாது.

உயர் பதவியில் இருப்பவர் களுக்கு உள்ள போராட்டம் எப்படி இருக்கும் என்றால், அவர்களுக்கும் மேலே உள்ள அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு பிரியமாய் நடக்க வேண்டும். அவர்கள் செய்வது சரியில்லை என்றாலும் எதிர்த்துப் பேசவோ, சுட்டிக் காட்டவோ முடியாது. எப்போதும் அவர்களுடைய கூப்பிடுதலை எதிர்பார்த்துக் கொண்டே இருக்கவேண்டும். குடும்பத்திற்கு என்று நேரம் ஒதுக்குவது மிகுந்த சிரமமானக் காரியமாகும். எப்போதும் இன்னொருவரின் அதிகாரத்திற்குக் கீழேயே இருக்க வேண்டும்.

இப்படிப்பட்ட போராட்டமில்லாத வாழ்க்கையை ஒரு மனிதன் பெற்றிருந்தாலும், அவன் போராட்டமான அந்த பணக்கார, பிரபல, உயர் பதவியுள்ள வாழ்க்கையை அறியாமலே தேடுகிறான். இவற்றையெல்லாம் மனிதன் யோசித்துப் பார்த்தால், நிம்மதி, சமாதானம் எவ்வளவு அவசியம் என்பதை உணர்ந்து கொள்வான்.

நல்ல தரமானதொரு வாழ்க்கையை வாழவேண்டுமென்று வாஞ்சிப்பது நல்லது. ஆனால், தன் காலத்திற்குப் பிறகு தன்னை நினைவுகூர வேண்டு மென்பதற்காகக் காரியங்களை செய்வது தேவையில்லை. தங்களுக்கு சிலை வைக்க வேண்டும், தங்களது புகைப்படங்கள் ஆங்காங்கே நினைவுகூரும் பொருட்டு வைக்க வேண்டுமென்று ஆசைப்படுவது தவறு. நமக்குப் பிற்பாடு உள்ள சந்ததியினருக்கு பிரயோஜனமாயிருக்கும்படியாகக் காரியங்களைச் செய்வது நல்லது. ஆஸ்பத்திரிகளைக் கட்டுவது, பள்ளி, கல்லூரிகளைக் கட்டுவது, அனாதை மற்றும் முதியோர் இல்லம் கட்டுவது இப்படிப்பட்டக் காரியங்களைச் செய்வது மிக நல்ல காரியங்களாகும். நம்முடைய பேருக்காக செய்வது தவறு. பின்வரும் சந்ததியினரைவிட கர்த்தர் நம்மை நினைவு கூர்ந்தால் போதும்.நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திலேயும் கர்த்தருடைய அன்பு வெளிப்பட வேண்டும். நம்முடைய தாலந்துகள், வரங்கள், பணம், படிப்பு எல்லாம் அவருக்காகப் பயன்படுத்தப் பட வேண்டும். அதில் பரிபூரணம் உண்டு. ஆமென்!

சிலர், உலகத்தில் மற்றும் நாட்டில் நடக்கும் பல காரியங்களை, டீ.வி. மூலமாகவும், இன்டெர்நெட் மூலமாகவும் மற்றும் பத்திரிகைகள் மூலமாகவும் படித்து தெரிந்து கொள்வார்கள். அதை மிகப் பெரிதாக எண்ணிக் கொள்வார்கள். அதினால் தங்களைத் தாங்களே அறிவாளி என்று நினைத்துக் கொள்வார்கள். இவர்கள், மற்றவர்களை மூடர்களைப் போல நினைப்பார்கள். இந்த அறிவுகூட இல்லையா? என்பது போல்தான் அவர்களைப் பார்ப்பார்கள். இந்த அறிவு ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாதது. இவர்கள் இதைப்பற்றி அறிந்திருப்பதினால் யாருக்கு என்ன பிரயோஜனம்? இவர்களிடத்தில் உண்மையான அன்பு இருக்காது. இவர்களுடைய செயல்பாடெல்லாம், இவர்களுடைய மூளையிலிருந்துதான், இருதயத்தில் உணர்வுள்ளவர்களாக இருக்கமாட்டார்கள். இவர்கள் அறிவு என்று நினைப்பதை, டீ.வி. மூலமாகவும், பத்திரிகை மூலமாகவும் ஒரு மணி நேரத்தில் நாம் தெரிந்து கொள்ளலாம். நமக்கு பிரயோஜனமானது எது, அவசியம் எது என்ற அறிவு முதலாவது வேண்டும். ஞானிகளும், விஞ்ஞானிகளும் பேசினதை எடுத்து மேற்கோள் காட்டுவார்கள். எனக்கு இவைகளையெல்லாம் பற்றித் தெரிந்திருக்கிறது பாருங்கள் என்று இவர்களது திறமையைக் காண்பிக்கிறதற்காகவே இந்த செயல்பாடு. மற்றபடி இவர்கள், அவர்கள் சொல்வதுபோல வாழமாட்டார்கள். அது வெறுமனே அறிவை காண்பிக்க மாத்திரமே. எல்லோரும் இவர்களை பெரிய அறிவாளியாகப் பார்க்க வேண்டும், அவ்வளவே. இவர்கள் வாழ்க்கையைக் குறித்து அறிந்திருக்க மாட்டார்கள். தங்களுக்கென்று ஒரு வாழ்க்கை உள்ளது, அது என்ன என்பதைப்பற்றி அறிந்திருக்க மாட்டார்கள். இவர்களால் சுயமாக யோசிக்க முடியாது. மற்றவர்களின் அறிவிலேயே ஓடுபவர்கள். இவர்களால் மேலோட்டமாகத் தான் ஒரு காரியத்தைப் பார்க்கமுடியும். எந்தவொரு காரியத்தையும், மனிதனையும் குறித்தும் ஆழமாக யோசிக்க இவர்களால் முடியாது. வேதத்தைப் படித்தால்மாத்திரமே இவர்களுக்கு இதிலிருந்து விடுதலை கிடைக்கும். கர்த்தருடைய வார்த்தைகள், இவர்களது சிந்தனைக்குள்ளும், உணர்வுகளுக்குள்ளும் சென்று, இவர்களை மாற்ற முடியும். இவர்கள் தங்களது வாழ்க்கையில் நேரிடும் எந்த சூழ்நிலையிலிருந்தும் கற்றுக் கொள்ள முடியாது. எந்த மனிதன் சொன்னாலும் அதை இவர்களால் கேட்டு புரிந்துகொள்ள முடியாது. இவர்களது மன மேட்டிமையே இவர்களுக்குத் தடையாகும். அதை உடைக்க கர்த்தருடைய வார்த்தையால் மட்டுமே முடியும்.